இராணிப்பேட்டை மாவட்ட திமுக அலுவலகத்தில் மாவட்ட தி.மு.க. WAR ROOM "ஓரணியில் தமிழ்நாடு" கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், இராணிப்பேட்டை மாவட்டகழக செயலாளர் ஆர்.காந்தி திறந்து வைத்தார். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.விநோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல். ஈஸ்வரப்பன், கழக மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் வேலூர் மண்டல பொறுப்பாளர் இசை, மாவட்ட நிர்வாகிகள் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மு.சிவானந்தம், துரை மஸ்தான் குமுதா குமார் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அ.அசோகன், கலைமணி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.விநோத் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் சிவா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் டான் போஸ்கோ துணை அமைப்பாளர்கள் பி.யுவராஜ் ராம்கி பிரகாஷ் சல்மா முனைவர் கார்த்திக் தொகுதி ஒருங்கிணைப் பாளர்கள் ராகுல் ஸ்ரீதர் ரவி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் மிகவும் பயனுள்ள திட்டம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் மக்களுக்கான அரசாக நடத்தி வருகிறார்!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் புகழாரம்!

சென்னை, ஜூலை 16-

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமாகும் என்று 'தினகரன்' நாளேட்டின் நேற்றைய தலையங்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளது.

இது குறித்து "மக்களுடன் முதல்வர்" என்ற தலைப்பில் 'தினகரன்' எழுதியுள்ள நேற்றைய தலையங்கம் வருமாறு:-

தமிழ்நாடு அரசின் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் மக்களிடையே பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. தமிழக அரசின் வேகங்களுக்கு தடை போடும் விதமாக தமிழ் நாட்டுக்கான நிதியை தரா மல் ஒன்றிய அரசு செயல் பட்டு வருகிறது. ஆனால் எதற்கும் அசராமல் புதிய புதிய திட்டங்கள் மூலம் சிறப்பான ஆட்சியை மு.க. ஸ்டாலின் அவர்கள் நடத்தி வருகிறார்.

தமிழ்நாடு அரசு துறைகளின் முக்கிய தகவல்கள், திட்டங்கள் உள்ளிட்டவைகள் குறித்து ஊடகங்கள் மூலமாக பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதற்கும், பிற அரசு துறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கும், செய்தி தொடர்பாளர்களாக 4 ஐஏஎஸ் அதிகாரிகள் நேற்று நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைக்கிறார். இந்த திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமாகும். காரணம் இத்திட்டத்தின் மூலம் நீண்ட காலமாக விவசாயிகள் மற்றும் புதிய வீடுகள் வாங்கியவர்கள் பட்டா மாற்றம், மின் இணைப்பு பெயர் மாற்றம் போன்ற பல மக்களின் பிரச்சினைகளை நேரடியாக வீடு தேடி சென்று அதிகாரிகள் குறைகளை நிவர்த்தி செய்கின்றனர்.

தினகரன்

ஜூலை 15, 2025 செவ்வாய்க்கிழமை

மக்களுடன் முதல்வர்

தமிழ்நாடு அரசின் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் மக்களிடையே பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. தமிழக அரசின் வேகங்களுக்கு தடை போடும் விதமாக தமிழ்நாட்டுக்கான நிதியை தராமல் ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது. ஆனால் எதற்கும் அசராமல் புதிய புதிய திட்டங்கள் மூலம் சிறப்பான ஆட்சியை மு.க.ஸ்டாலின் நடத்தி வருகிறார்.

தமிழ்நாடு அரசு துறைகளின் முக்கிய தகவல்கள், திட்டங்கள் உள்ளிட்டவைகள் குறித்து ஊடகங்கள் மூலமாக பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதற்கும், பிற அரசு துறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கும், செய்தி தொடர்பாளர்களாக 4 ஐஏஎஸ் அதிகாரிகள் நேற்று நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைக்கிறார். இந்த திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமாகும். காரணம் இத்திட்டத்தின் மூலம் நீண்ட காலமாக விவசாயிகள் மற்றும் புதிய வீடுகள் வாங்கியவர்கள் பட்டா மாற்றம், மின் இணைப்பு பெயர் மாற்றம் போன்ற பல மக்களின் பிரச்சினைகளை நேரடியாக வீடு தேடி சென்று அதிகாரிகள் குறைகளை நிவர்த்தி செய்கின்றனர்.

இவ்வாறாக மக்களுக்கான அரசாக நடத்தி வருகிறார். தமிழகத்தில் செயல்படுத்தப்படவிருக்கும் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் எதற்காக, எப்படி, ஏன் நடத்தப்படுகிறது என்பது குறித்த முழு விவரங்களை தமிழக அரசு தெரிவித்துள்ளது. அரசின் செயல்பாடுகள் உரிய நேரத்தில் மக்களை சென்றடைய வேண்டும். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் வரும் மனுக்களுக்கு 45 நாட்களில் தீர்வு காண வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். அதன்படி அனைத்து துறைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இம்முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமை தொகைக்கான விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

தகுதியானவர்கள் விடுபட்டு இருந்தால் விண்ணப்பங்களை பெற்று நிரப்பி கொடுக்க, உடனடியாக பதிவேற்றம் செய்யப்பட்டு திட்டத்தில் இணைக்கப்படுவர். மக்கள் அதிகமாக கூடுகிற, வசிக்கிற இடங்களில் முகாம்கள் நடத்தப்படுகிறது. மக்களுக்கு நாம் முகாம் நடத்துவது தெரியப்படுத்த, முகாம் நடத்துவதற்கு முன்பாக தன்னார்வலர்களை அனுப்பி சிறப்பு திட்ட முகாம் நடத்தப்படுகிறது. இதற்காக ஒரு லட்சம் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். நவம்பர் வரை 10,000 முகாம்கள் நடத்தப்பட உள்ளன. முன்பு 20,000 மக்கள் தொகைக்கு ஒரு முகாம் இருந்தது. இப்போது 10,000 மக்கள் தொகைக்கு ஒரு முகாம் அமைக்கப்பட உள்ளது.

முகாம்கள் நடக்கும் ஒரு வாரத்துக்கு முன்பு வீடு, வீடாக சென்று மக்களுக்கு தெரியப்படுத்தப்படும். வாரத்தில் 4 நாட்கள் முகாம் நடைபெறும். இது நவம்பர் மாதம் வரை நடைபெறவிருக்கிறது. மக்களின் குறைகளை கேட்டறிய, 1100 என்ற எண்ணுடன் 100 பேர் கொண்ட உதவி மையம் செல்பட்டு வருகிறது. அரசின் சேவைகளை பெற மக்கள் சிரமப்படுவதை அறிந்து மக்களுடன் முதல்வர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அரசின் சேவைகளை பெற மக்கள் சிரமப்படுவதை அறிந்து, மக்களுடன் முதல்வர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் மக்களிடையே விரைவாக செல்ல கண்காணிக்கப்பட்டு வருகிறது. மக்களின் புகார் மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் முகவரி துறை மூலம் 1.5 கோடி மனுக்கள் பெறப்பட்டன. கடந்த 30ம் தேதி வரை 1 கோடி மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. 2,344 ஊரக முகாம்கள் மூலம் 95 சதவீதம் தீர்வு காணப்பட்டுள்ளதை மக்களுடன் முதல்வர் என்பதற்கு சான்றாக எடுத்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு 'தினகரன்' தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி மூலமாக "உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியம், ஆலம்பாடி ஊராட்சியில் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தலைவர் ஷேக் அப்துல் ரகுமான், விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி , மாவட்ட துணை செயலாளர் இரா.கற்பகம், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், S.லூயிஸ், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், பேரூராட்சி தலைவர் S.அன்பு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் இரா.கிருஷ்ணராஜ், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் அறிவழகன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் கார்த்திகேயன், புஷ்பராஜ், ஒன்றிய நிர்வாகிகள் முருகையன், காத்தவராயன், சுலோச்சனா ஏழுமலை, சேகர், கோபால், சாந்தகுமார், ஒன்றிய கவுன்சிலர்கள் ராஜராஜேஸ்வரி, குப்புசாமி, ஊராட்சி மன்ற தலைவர் ராஜகுமாரி, சிவபூசணம், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் ஜீவா, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

திருப்புவனம் வட்டம் – மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த

அஜித்குமார் குடும்பத்திற்கு - ரூ 7.50 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பின்படி –

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேரில் வழங்கினார்!

திருப்புவனம், ஜூலை 16-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, கூட்டுற வுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன்-சிவகங்கை மாவட்டம் - திருப்பு வனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த அஜித்குமார் குடும்பத்தினருக்கு ரூபாய் 07.50 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையினை நேரில் சென்று வழங்கினார்.

இதுதொடர்பான செய்திக் குறிப்பு வருமாறு :-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த செல்வன் அஜித்குமார் என்பவரின் குடும்பத்தாரிடம் கடந்த 1.7.2025 அன்று அலைபேசியின் வாயிலாகத் தொடர்பு கொண்டு, தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும், அக்குடும்பத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், கடந்த 2.7.2025 அன்று கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினை, மறைந்த அஜித்குமார் சகோதரரான நவீன்குமாருக்கு (வயது 27), சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிட், (காரைக்குடி) டெக்னீசியன் பணியிடத்திற்கென வழங்கினார்.

அக்குடும்பத்தினரின் கோரிக்கைக்கிணங்க மதுரையிலுள்ள ஆவின் நிறுவனத்தில் பணி நியமன ஆணையினை மாற்றி வழங்கிடவும், முன்னதாக இக்குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட வீட்டு மனைப் பட்டா தொடர்பாக, மாற்று இடம் வேண்டி விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பாகவும், உரிய நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், அக்குடும்பத்தினருக்கு ரூபாய் 07.50 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையினையும் நேற்றைய தினம் (14.7.2025) சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் நேரில் சென்று வழங்கி ஆறுதல் கூறி, அக்குடும்பத்தினருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், திருப்புவனம் பேரூராட்சித் தலைவர் சேங்கைமாறன், திருப்புவனம் வட்டாட்சியர் (பொ) ரமேஷ் உட்பட பலர் உடனிருந்தனர்.

தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி

புதுச்சேரி–காரைக்கால் மாநில அமைப்பாளர்–துணை அமைப்பாளர்கள் நியமனம்

தி.மு.க.அமைப்பு சாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி-புதுச்சேரி - காரைக்கால் மாநில அமைப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

புதுச்சேரி - காரைக்கால் மாநிலம்

தலைவர் - எம். லாரன்ஸ் செல்வராஜ்
கே. 1, ஹவுசிங் போர்டு,
நேரு நகர்,
காரைக்கால்.

துணைத் தலைவர் - ஜி. சேதுராமன்
355, சுனாமி நகர்,
காரைக்கால் மேடு,
காரைக்கால்.

அமைப்பாளர் - அ. அக்பர் அலி
2, வி.ஓ.சி. தெரு,
பி.கே. சாலை,
காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் 1)என்.முகந்தன் 43, நடுஓடு துறை நிரவி அஞ்சல், காரைக்கால். 2) பி. சகாய ராஜ் 26, செபஸ்தியார் கோவில் தெரு, தருமபுரம், காரைக்கால். 3) எஸ். பாவா பாஹீருதீன் 1, கீதர்பள்ளி தெரு, காரைக்கால். 4) எஸ். முருகையன் 20, தெற்கு தெரு, கீழையூர் தெற்கு, திருபட்டினம், காரைக்கால். 5) ஜி.வேல்முருகன் 2, தெற்கு தெரு, வரிச்சிக்குடி, கோட்டுச்சேரி, காரைக்கால்.

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 11.07.2025

டி.செங்குட்டுவன்
செயலாளர்
தி.மு.க. அமைப்பு சாரா
ஓட்டுநர் அணி

கழக துணைப் பொதுச் செயலாளர்

திருச்சி சிவா எம்.பி.யின் மூத்த சகோதரியின் கணவர் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 16-

கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி.யின் மூத்த சகோதரியின் கணவர் நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து விடுத்த செய்தி வருமாறு:-

கழக துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற மாநிலங்களவை கழகக் குழுவின் தலைவர், திருச்சி சிவா அவர்களின் மூத்த சகோதரி திருமதி சகுந்தலா அவர்களின் கணவரும், ஓய்வு பெற்ற பள்ளி தலைமை ஆசிரியரும், ஆசிரியர் மன்ற முன்னாள் செயலாளருமான ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள், நேற்று உடல்நலக்குறைவால், தமது 87வது வயதில் இயற்கை எய்தினார் என்ற தகவலறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

அன்னாரை இழந்து துயருறும் அவரது துணைவியார் திருமதி சகுந்தலா, அவ்விணையரின் பிள்ளைகளான மாலதி, ராஜ்காந்த் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், தமது சகோதரியின் கணவரை இழந்து ஆற்றொணாத் துயருறும் சகோதரர் திருச்சி சிவா அவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மறைந்த பாலசுப்பிரமணியன் அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று (15.7.2025-செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணியளவில் லால்குடி அருகில், அன்பில் கிராமத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு, இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில்பெருந்தலைவர் காமராஜரின்பிறந்தநாள்விழாவை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, ஒன்றிய பெருந்தலைவர்கள் விஜயகுமார், கண்மணி நெடுஞ்செழியன், அமுதா ரவிக்குமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், நகர செயலாளர் கார்த்திக், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

திருப்பத்தூர் தொகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தை நல்லதம்பி வக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர்.ஜெ. நாராயணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.ஜெ.மணவாளன், எ.பிரேமாவதி, உ.பாலமுருகன், வி.சதானந்தம், சேர்மென்கள்.விஜயாஅருணாசலம், திருமதிதிருமுருகன், துணைசேர்மன்கள் டி.ஆர்.ஞானசேகரன், ஜி.மோகன்குமார், ஊராட்சி மன்ற தலைவர்.கோமதிகார்த்திகேயன், கவுன்சிலர்கள். கஸ்தூரிரகு, கலைவாணிசெல்வராஜ், வினோத்குமார், தாமோதரன், அணிகளின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் சிவலிங்கம், சின்னபையன், சாமராஜ், ராமச்சந்திரன், ஆதித்யா, குலோத்துங்கன், ராஜா, தசரதன், சீனிவாசன், கழகத் தோழர்கள், பொதுமக்கள் கொண்டு இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.